**<u>சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை.</u>**

**<u>முன்னிலை</u> :    திரு.பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**
**சார்பு நீதிபதி,  ஊத்தங்கரை.**

**2025–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02–ம் நாள் செவ்வாய்கிழமை திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் கார்த்திகை திங்கள் 16–ம் நாள்**

**<u>இடைநிலை மனு எண். 03/2024</u>**

**<u>இன்</u>**

**<u>அசல் வழக்கு எண். 28/2024</u>**

மைனர். பிரவின்குமார்
(மைனருக்கு கார்டியன் தாயார் சாந்தி)

... மனுதாரர் / வாதி

**//எதிர்//**

1. சிவா (எ) சிவன்
2. காயத்ரி
3. கௌதம்
4. தனிகாச்சலம்
5. செல்வி
6. சுரேஷ்
7. மணியம்மாள்
8. கௌரம்மாள்
9. மஞ்சுளா
10. கோவிந்தம்மாள்
11. மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி
12. மாவட்ட பதிவாளர், கிருஷ்ணகிரி
13. சார்பதிவாளர், ஊத்தங்கரை

...எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

தமிழ்செல்வி

... எதிர்மனுதாரர் / உத்தேச பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. மூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 10ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. சக்திவேல்,

அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 9 மற்றும் 11 முதல் 13 வரையிலான எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும் இரு தரப்பு வாத உரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

வழக்கில் உத்தேச தரப்பினரை சேர்க்க உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1, விதி 10(2) மற்றும் பிரிவு 151 –ன் படி இம்மனு தாக்கல்.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

மேற்படி வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கோரியும், மோசடி ஆவணங்கள் செல்லாது என அறிவிக்க கோரியும் மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு கடந்த 14.06.2024–ம் தேதிக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் தாவா சொத்து பொறுத்து மனுதாரரை ஏமாற்றும் நோக்கில் 10–ம் பிரதிவாதி கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், ஆண்டியூர் அஞ்சல், கீழ்மத்தூர் கிராமத்தில் வசித்து தற்போது திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கொரட்டி அஞ்சல் மற்றும் கிராமத்தில் வசித்து வரும் சிவக்குமார் மனைவி தமிழ்செல்வி என்பவருக்கு கடந்த 21.02.2024–ம் தேதியில் மோசடியாக கிரைய பத்திரம் ஒன்றினை ஆவண எண்.1186/2024 எழுதிக்கொடுத்து மோசடி செய்துள்ளார். மேற்படி உத்தேச பிரதிவாதியை வழக்கில் தரப்பினராகவும், உத்தேச பிரதிவாதி எழுதிப்பெற்ற கிரைய ஆவண எண். 1186/2024 ஆவணத்தை செல்லாது

என அறிவிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே வழக்கில் உத்தேச பிரதிவாதியை தரப்பினராக சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரரின் எதிர் உரையின் சுருக்கம்.**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனு சொத்தினை பொறுத்து 1—ம் எதிர்மனுதாரர் / 1—ம் பிரதிவாதியான சிவா (எ) சிவன் என்பவரிடமிருந்து இந்த எதிர்மனுதாரர் / 10—ம் பிரதிவாதி தன் சொந்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். மனு சொத்திற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் இந்த எதிர்மனுதாரர் / 10—ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து இந்த 10—ம் பிரதிவாதி வில்லங்க பாராதீனம் செய்துள்ள ஆவணத்தை செல்லாது என அறிவிக்க கோர இந்த மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை. மேலும் 10—ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து 10—ம் பிரதிவாதி அனுபவித்து வரும் விவரம் மற்றும் சங்கதிகள் அனைத்தும் மனுதாரர்களுக்கு நன்கு தெரிந்தும் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

**4.தீர்வுக்கான பிரச்சனை :-**

1. மனுதாரர் மனு அனுமதிக்க கூடியதா ?

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தவில்லை.

**6.தீர்வு:-**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கோரியும், மோசடி ஆவணங்கள் செல்லாது என அறிவிக்க கோரியும் மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் தாவா சொத்து பொறுத்து மனுதாரரை ஏமாற்றும் நோக்கில் 10–ம் பிரதிவாதி உத்தேச பிரதிவாதி சிவக்குமார் மனைவி தமிழ்செல்வி என்பவருக்கு கடந்த 21.02.2024–ம் தேதியில் மோசடியாக கிரைய பத்திரம் ஒன்றினை ஆவண எண்.1186/2024 எழுதிக்கொடுத்து மோசடி செய்துள்ளார் என்றும், மேற்படி உத்தேச பிரதிவாதியை வழக்கில் தரப்பினராகவும், உத்தேச பிரதிவாதி எழுதிப்பெற்ற கிரைய ஆவண எண். 1186/2024 ஆவணத்தை செல்லாது என அறிவிக்க வேண்டியது அவசியமாகிறது என்றும் எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனு சொத்தினை பொறுத்து 1–ம் எதிர்மனுதாரர் / 1–ம் பிரதிவாதியான சிவா (எ) சிவன் என்பவரிடமிருந்து இந்த எதிர்மனுதாரர் / 10–ம் பிரதிவாதி தன் சொந்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்றும், மனு சொத்திற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் இந்த எதிர்மனுதாரர் / 10–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து இந்த 10–ம் பிரதிவாதி வில்லங்க பாராதீனம் செய்துள்ள ஆவணத்தை செல்லாது என அறிவிக்க கோர இந்த மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் எடுத்துரைத்தார்.

மேற்படி வாதுரைகளை பரிசீலிக்கையில் இருதரப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை வழக்கு விசாரணையின் போதுதான் பரிசீலிக்க முடியும்.

மேலும் இவ்வழக்கு பாக வழக்கு என்பதாலும் வழக்கு சொத்தை 10—ம் பிரதிவாதி உத்தேச பிரதிவாதிக்கு வழக்கு நிலுவையில் உள்ள போது பாராதீனம் செய்துள்ளதால் வழக்கில் ஏற்படும் வீண் சச்சரவுகளை தவிர்ப்பதற்காகவும் மேற்படி உத்தேச பிரதிவாதியை தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியம் ஏற்பட்டுள்ளதாலும், மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

THIRUGNANASAMBANDAM P
Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை .**
**2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.**

THIRUGNANASAMBANDAM P
Subordinate Judge, Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.